செ. கு. எண்:183 நாள்: 19—5—12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.5.2012

சென்னை, பெரவள்ளூர், ராஜா தோட்டத்தைச் சேர்ந்த திரு. கண்ணப்பன் என்பவரின் மகன் திரு. கே. தீனதயாளன் 17.5.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் பெரம்பூர் மேம்பாலத்தின் மீது சென்று கொண்டிருக்கையில், பின்னால் வந்த அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த தீனதயாளனின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சாலை விபத்தில் இரு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற திரு. ராஜாகண்ணு என்பவரின் மகன் திரு. விஜய் பலத்த காயமடைந்தார் என்பதை அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. தீனதயாளன் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் திரு. விஜய்க்கு 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: –

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.